முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்துணை நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.03.2023**, திங்கட்கிழமை

1. கூறப்பா மகாமந்திர செபம்
   குருவரங்கன் தரும் உபதேசமாக
   பாரப்பா அரங்கன் தருகின்ற
   பரோபகார அன்னதான சேவைதன்னை
2. தன்னையே வரமாக ஏற்று
   தரணியோர் கடைபிடித்து வர
   மண்ணுலகில் தேறுவரெனக் கூறி
   மார்க்கமுடன் சுபகிருது சேல்திங்கள்
   **(**சுபகிருது வருடம் பங்குனி மாதம் **6**ம் நாள், **20.03.2023**, திங்கட்கிழமை**)**
3. திங்களிலே சஷ்டிதிகதி சோமவாரம்
   தேசிகனுக்கு அனுகூல ஆசிதனை
   இங்கனமே புகழ்துணை நாயனாரும்
   இயம்பிடுவேன் உலகநலம் பெற
4. நலம்தரும் ஞான வழிகளாக
   ஞாலமதில் சன்மார்க்க நெறி
   பலம்பெற மக்களிடை அரங்கன்
   பாதுகாப்புற அருளி வர
5. வருவதை ஏற்று மக்கள்
   வருங்கால மாற்றமாகக் கருதி
   தருகின்ற தயவு குணம் பெருக
   தருமத்தை கையில் எடுத்து மக்கள்
6. மக்களெல்லாம் சேவையாகச் செய்து
   மறுமை வெல்லும் யுத்தியாக
   தேக்கமின்றி தொடர்ந்து செய்ய
   தெய்வபலமாக தேசிகனருள்
7. அருள்பலம் கூடி அனைத்திலும்
   அளவிலா பாதுகாப்பு அமைதி
   அருள் பொருள் வளமாக மாறி
   அகிலத்தார் ஏற்றம் காண்பர்
8. காண்கவே மக்களிடை நிகழும்
   கருணையோடு கூடிய மாற்றமே
   உண்மை ஆன்மீக ஞானமாக
   உயர் சமூக மாற்றம் தேடும்
9. தேடும் ஆன்மீக அரசியல்
   தேசிகனின் அவதார களமாக
   நாடெங்கிலும் தேற்றம் கண்டு
   ஞானவான்கள் தலைமை தன்னை

10. தன்னையே தேர்வு செய்கின்ற
தக்க எழுச்சியாக மாறி
மண்ணுலகம் ஞான ஆட்சிதனை
மகான் அரங்கன் வேண்டலாக
11. ஆகவே கண்டு அற்புதம்
அகிலம் கண்டு பாதுகாப்பும்
மிகையான வளர்ச்சியும் காணும்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–